**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC .365/2019 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-1/PW-1 | Village: |
| Name : லோகநாதன் | Age :59 |
| Father's/Husband's Name : ராஜமாணிக்கம் | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 04.11.2024**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமைக் காவலர் திருமதி. அபிராமி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த போது வழக்கு விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும் என்று சாட்சியம் அளித்துள்ளேன். ஆஜர் எதிரிதான் விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஆவார் ( சாட்சி எதிரியை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டுகிறார்). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரியை நான் முதன் முதலில் இன்று தான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்றால் விபத்து நடைபெற்ற அன்று பார்த்தேன். அதன் பிறகு இன்றுதான் பார்க்கிறேன். விபத்து நடைபெற்று 10 வருடங்கள் ஆகிவிட்டது என்றால் சரிதான். விபத்து நடந்த போது எதிரியை பார்த்த பிறகு இன்றுதான் அவரை பார்க்கிறேன் என்றால் சரிதான். நான் கூடை பின்னும் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் தொழில் சம்மந்தமாக வெவ்வெறு ஊர்களுக்கு சென்று வியாபாரம் செய்வேன் என்றாலும் நிரந்தரமாக ஒரு இடத்தில் இருக்க மாட்டேன் என்றாலும் சரிதான். நான் தற்போது கடிச்சம்பாடி கிராமத்தில் இருந்து நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்திலிருந்து கடிச்சம்பாடி சுமார் 15 கி.மீ. இருக்கும் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோனது எனது தகப்பனாரின் தம்பி மனைவி என்றால் சரிதான். அவருக்கு குழந்தைகள் ஏதுமில்லை என்றால் சரிதான். வளர்ப்பு மகன் ஒருவர் உள்ளார். அவர் என்னுடன்தான் உள்ளார். எனக்கு குழந்தைகள் உள்ளார்கள் என்றாலும் நான் அவர்களுடன்தான் கடிச்சம்பாடியில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் வெற்றிலை பாக்கு வாங்கி கொண்டிருந்தபோது சத்தம் கேட்டுதான் நான் திரும்பி பார்த்தேன் என்றால் சரியல்ல. வெற்றிலை பாக்கு வாங்கி கொண்டு திரும்பி வந்தபோதுதான் விபத்து நடைபெற்றது. நான் போலிசார் விசாரணையில் நான் வெற்றிலை வாங்கிவிட்டு எனது சித்திக்கு பின்னால் சென்று கொண்டிருந்தபோதுதான் விபத்து நடைபெற்றது என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்து ¼ மணி நேரத்தில் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அசா1 புகார் மனுவில் நான் அப்போதுதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். போலிசார் அது இல்லாமல் 2 வெள்ளை பேப்பர்களில் என்னிடம் கையொப்பம் வாங்கி கொண்டார்கள்

என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புகார் மனுவை யார் எழுதியது என்றால் 10 வருடம் ஆகிவிட்டதால் தற்போது எனக்கு தெரியவில்லை. புகார் மனுவை போலிசார் எழுதினார்களா அல்லது வேறு யாரும் எழுதினார்களா என்றால் போலிசார்தான் எழுதினார். அடிபட்ட நபரை மருத்துவமனையில் சேர்த்தது நான்தான் என்றால் சரிதான். மருத்துவர் என்னை விசாரித்தாரா என்றால் விசாரித்தார். கையொப்பமும் வாங்கி கொண்டார். எனக்கு சம்பவம் சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றாலும் நான் சம்பவம் குறித்து தகவல் அறிந்து கடிச்சம்பாடியிலிருந்து மருத்துவமனை சென்று பார்த்தேன் என்றாலும் விபத்தில் இறந்துபோன நபர் எனது சித்தி என்பதால் மோட்டார் வாகன இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2024.11.04 18:33:22 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**